සියලු ම හිමිකම් ඇවිරිණි. / All Rights Reserved

## வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்
## Provincial Department of Education - NWP

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව Provincial Department of Education - NWP

### மூன்றாம் தவணைப் பரீட்சை - தரம் - 06 - 2023
### Third Term Test - Grade 06 - 2023

### புவியியல்

நேரம்: 2 மணி.

பெயர்:

### பகுதி I

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- **இலக்கம் 1-5 வரையிலான வினாக்களுக்கு பொருத்தமான சொற்களை அடைப்பிற்குள்ளிருந்து தெரிவு செய்து இடைவெளி நிரப்புக.**

01. பாடசாலை அமைந்துள்ள மிகச் சிறிய நிர்வாக அலகு ........................................ ஆகும்.
(மாவட்டம், கிராம உத்தியோகத்தர் பிரிவு, பிரதேச செயலாளர் பிரிவு)

02. தெற்கு திசைக்கும் கிழக்கு திசைக்கும் இடையில் உள்ள உப திசை ......................... ஆகும்.
(அக்கினி மூலை, ஈசான மூலை, வாயு மூலை)

03. பிலிமத்தலாவ ............................................ உற்பத்திக்கு பிரசித்தி பெற்ற இடமாகும்.
(பித்தளை பொருட்கள், பாய்கள், முகமூடிகள்)

04. கண்டி நகரத்தில் .............................................. அமைந்துள்ளதால் முக்கியம் பெறுகின்றது.
(தலதா மாளிகை, பீடபூமி, பழைய ராச்சியம்)

05. வானிலை அம்சங்களின் நீண்ட காலத் தொகுப்பு .................................. எனப்படும்.
(வெப்பநிலை. காலநிலை, வானிலை)

- **06 - 10 வரையான கூற்றுக்களுக்கு சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் அடையாளமிடுக.**

06. மத்திய மாகாணம் மாத்தளை, கண்டி மற்றும் .............................. மாவட்டங்களைக் கொண்டது.

07. இலங்கையின் முதலாவது அதிவேக நெடுஞ்சாலை .................................. ஆகும்.

08. உலகிலேயே மிகப்பெரிய தீவு .................................. ஆகும்.

09. நீராவி ஒடுங்கிய பின் .................................. ஏற்படும்.

10. மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்துவதற்கு .............................. மின் குமிழை உபயோகிக்க முடியும்.

- **இலக்கம் 11 - 15 வரை உள்ள வினாக்களுக்கு சரியாயின் சரி (✓) எனவும் பிழையாயின் பிழை (×) எனவும் அடைப்புக்குள் இடுக.**

11. உயிர்வாயு ஒரு முக்கியமான மாற்று சக்தி மூலாதாரம் ஆகும். ( )
12. வரைபடம் அல்லது திட்டப் படத்தை வரையும் போது திசை மிகவும் முக்கியமானது. ( )
13. வழி மாசடைதல் சிறுநீரக கோளாறுகளை ஏற்படுத்துகின்றது. ( )
14. வழி அமுக்கம் மில்லி பார்களில் அளவிடப்படுகிறது. ( )
15. கனிய வளங்களை நிலத்திலிருந்து பெறுவது சிறந்த பயனாகும். ( )

- **இலக்கம் 16 - 20 வரையிலான வினாக்களுக்கு பொருத்தமான விடையை தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.**


16. புத்தளம் மாவட்டத்தில் உள்ள பங்கதெனிய எந்த உற்பத்திக்கு பிரபலமானது
i. பித்தளை பொருட்கள் ii. ஓடு, கற்கள் iii. பாய்கள் iv. முக மூடிகள்

17. அரசினால் வழுங்கப்படும் ,லவச சேவை
   i. தபால் சேவை ii. போக்குவரத்து சேவை
   iii. தொடர்பாடல் சேவை iv. கல்வி சேவை
18. சூரியன் உதிக்கும் திசையை பார்த்து இரு கைகளையும் இரு பக்கமும் நீட்டி நிக்கும் போது எமது இடது கை காட்டும் திசை,
   i. வடக்கு ii. தெற்கு iii. கிழக்கு iv. மேற்கு
19. அதிக எண்ணிக்கையிலான மாவட்டங்களை கொண்ட மாகாணம் எது?
   i. கிழக்கு மாகாணம் ii. மத்திய மாகாணம்
   iii. சப்ரகமுவ மாகாணம் iv. வட மாகாணம்
20. இலங்கையிலுள்ள இனங்களில் குறைந்த சனத்தொகை கொண்ட இடம்,
   i. சிங்களவர் ii. இலங்கைத் தமிழர் iii. இந்திய தமிழர் iv. முஸ்லிம்கள்

## பகுதி II

• **முதலாம் வினா உட்பட மொத்தம் 5 வினாக்களுக்கு விடை தருக.**

01. (அ) பின்வரும் இலங்கையின் அமைவிடம் தொடர்பான படத்தினை பயன்படுத்தி கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.




   i. இலக்கம் 1 இனால் காட்டப்பட்டுள்ள கடலை பெயரிடுக. (2 புள்ளி)
   ii. இலக்கம் 2 இனால் காட்டப்பட்டுள்ள விரிகுடா யாது? 2 புள்ளி)
   iii. இலக்கம்3 இனால் குறித்துக் காட்டப்பட்டுள்ள நீரிணைக் குறிப்பிடுக. (2 புள்ளி)
   iv. இலக்கம் 4 குறிக்கும் நாடு யாது? (2 புள்ளி)

(ஆ) i. இலங்கை எக்கண்டத்தைச் சேர்ந்தது? (2 புள்ளி)
   ii. இலங்கை அமைந்துள்ள சமுத்திரத்தை குறிப்பிடுக. (2 புள்ளி)
   iii. ஆபிரிக்கா கண்டம் இலங்கைக்கு எத்திசையில் அமைந்துள்ளது? (2 புள்ளி)
   iv. இலங்கையின் அமைவிடமானது எமது நாட்டின் கலாசாரத்தில் தாக்கம் செலுத்தும் விதத்தினை இரண்டு காரணிகள் உதவியுடன் குறிப்பிடுக. (2 புள்ளி)

02. (அ) i. கழிவுப் பொருட்களை அவை உருவாகும் விதத்திற்கேற்ப மூன்று வகைப்படுத்துக. (3 புள்ளி)
   ii. கழிவு பொருட்களை முறையாக அகற்றும் மூன்று வழிமுறைகளை குறிப்பிடுக. (3 புள்ளி)
   iii. கழிவுகளை அகற்றுவதற்கு பயன்படும் நீலம் மற்றும் செம்மஞ்சள் நிற தொட்டிகளில் அகற்றப்படும் இரண்டு வகையான கழிவுகளை எழுதுக. (2 புள்ளி)
   (ஆ) கழிவுகளின் மூன்று பயன்களை குறிப்பிடவும்.

03. i. நீரின் பயன்கள் மூன்று தருக. (3 புள்ளி)
   ii. நீர் மாசடையும் முறைகள் இரண்டு எழுதுக. (4 புள்ளி)
   iii. விடைத்தாளில் பின்வரும் அட்டவணையைப் பிரதிபண்ணி விடையளிக்கவும். (4 புள்ளி)


| நீர்ப்பற்றாககுறையால் ஏற்படும் பிரச்சினைகள் | நீரைப் பாதுகாக்கும் முறைகள். |
|---|---|
| 1. .................................................................. | 1. .................................................................. |
| 2. .................................................................. | 2. .................................................................. |

04. கீழே தரப்பட்டுள்ள வரைபடங்களின் உதவியுடன் கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்க.

i. நீர் வட்டத்தின் செயற்பாடுகள் நான்கு குறிப்பிடுக. (4 புள்ளி)

ii. படத்தில் x, y, z என்பவற்றினால் காட்டப்பட்டுள்ள வானிலை மூலகங்களை அளவிடும் கருவிகளை பெயரிடுக. (3 புள்ளி)

X



Y



Z



iii. வானிலை தகவல்களை அறிந்து கொள்ளக்கூடிய நபர்கள் நால்வரின் பெயர்களை தருக. (4 புள்ளி)

05. i. மகரந்த சேர்க்கைக்கு உதவும் பூச்சியினம் 2 குறிப்பிடுக. (2 புள்ளி)

ii. நோய் பரப்பும் பிராணிகள் இரண்டின் பெயர் எழுதுக. (2 புள்ளி)

iii. (அ) தாவரங்களினால் விலங்குகளுக்கு உள்ள பயன்கள் மூன்று தருக. (3 புள்ளி)

(ஆ) கீழே தரப்பட்டுள்ள விலங்குகளினால் ஏற்படும் பயன்கள் ஒன்று விதம் எழுதுக.

1. செண்பகம்
2. தும்பி
3. மண்புழு
4. வௌவால் (4 புள்ளி)

06. i. கீழே தரப்பட்டுள்ள அட்டவணையை பிரதிபண்ணி தரப்பட்டுள்ள தகவல்களின் அடிப்படையில் விடை எழுதுக.
(குளம், ஆறுகள், வயல்வெளிகள், சாலைகள், காடுகள், பாறைகள், தோட்டங்கள், மலைகள்)

| இயற்கை அம்சங்கள் | மனிதனால் உருவாக்கப்பட்ட அம்சங்கள் |
|---|---|
| ........................................................................ | ........................................................................ |
| ........................................................................ | ........................................................................ |
| ........................................................................ | ........................................................................ |

(4 புள்ளி)

ii. வீட்டில் உபயோகிக்கும் சக்தி மூலங்கள் நான்கு தருக. (2 புள்ளி)

iii. (அ) சக்திக்கான கேள்வி அதிகரித்து செல்வதற்கான காரணங்கள் இரண்டு தருக. (2 புள்ளி)
(ஆ) மின்சக்தி விரயத்தை குறைக்க கூடிய வழிமுறைகள் மூன்று குறிப்பிடுக. (3 புள்ளி)

(4) WWW.PastPapers.WiKi (3)
Download Term Test Papers, Short Notes From One Place!

07. பின்வரும் இலங்கையின் மாவட்ட வரைபடத்தின் உதவியுடன் கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடை தருக.

i. (அ) A எழுதினால் காட்டப்பட்டிருக்கும் துறைமுகம் யாது? 1 புள்ளி

(ஆ) அத்துறைமுகத்தை அண்மித்த பிரதேசத்தின் இரண்டு முக்கியத்துவங்களை குறிப்பிடுக. 2 புள்ளி

ii. (அ) B எழுத்தினால் குறிக்கப்பட்டிருக்கும் நகரம் எது? 1 புள்ளி


(ஆ) அந்நகரத்தின் முக்கியத்துவங்கள் இரண்டு தருக? 2 புள்ளி

iii. (அ) C எழுதினால் காட்டப்பட்ட மாவட்டம் யாது? 1 புள்ளி

(ஆ) அம்மாவட்டத்தின் முக்கியத்துவங்கள் இரண்டு எழுதுக? 2 புள்ளி

iv. நிழல் தீட்டப்பட்ட மாகாணத்தின் பெயர் யாது? 1 புள்ளி

v. F எழுத்தினால் காட்டப்பட்டுள்ள மாவட்டத்தினை பெயரிடுக. 1 புள்ளி




PAST PAPERS WIKI
(4) WWW.PastPapers.WiKi (4)
Download Term Test Papers, Short Notes From One Place!

සියලු ම හිමිකම් ඇවිරිණි. / All Rights Reserved

வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்
Provincial Department of Education - NWP

மூன்றாம் தவணைப் பரீட்சை - தரம் - 06 - 2023
Third Term Test - Grade 06 - 2023

# புவியியல்

விடைப்பத்திரம்

## பகுதி I

1. கிராம உத்தியோகத்தில் பிரிவு
2. அக்கினி மூலை
3. பித்தளை பொருட்கள்
4. தலதா மாளிகை
5. காலநிலை
6. நுவரெலியா
7. கட்டுநாயக்க - கொழும்பு
8. கிறீன்லாந்து
9. மலை வீழ்ச்சி
10. CFL மின்குமிழ் / LED ஒளிக்காலும் இருவாயி
11. ✓
12. ✓
13. ×
14. ✓
15. ✓
16. 3
17. 4
18. 1
19. 4
20. 3

(2 x 20 = 40 புள்ளிகள்)

## பகுதி II

01. (அ) i. அரபிக்கடல்
ii. வங்காளவிரிகுடா
iii. பாக்கு நீரினை
iv. இந்தியா

(ஆ) i. ஆசியா
ii. இந்து சமுத்திரம்
iii. மேற்கு
iv. பல்வேறுபட்ட மக்கள் பிரிவினரின் கலப்பினால் பல்வேறு மொழி, மத இனப் பிரிவினர் காணப்படுகின்றனர்.
மேலை தேசத்தவரின் வருகையுடன் பல்வேறு கலாச்சார அம்சங்கள் சமூகத்துடன் கலத்தல்.
பல்வேறுபட்ட மொழிகளின் செல்வாக்கு.

02. i. வீட்டுக்கழிவுப்பொருள்ஈ விவசாயக் கழிவுப்பொருள்ஈ கைத்தொழிலுக்குரிய கழிவுப்பொள்.
ii. மீள் உபயோகம், மீள் சுழற்சி உபயாகத்தினை குறைத்தல்
அகற்றும் கழிவுப் பொருட்களால் ஆக்கங்கள் செய்தல்,
கழிவுப்பொருளைப் பயன்படுத்தி உயிர்வாயு தயாரித்தல்.
iii. (அ) நீலம் - கடதாசி காட்போட் (உக்கக்கூடியது)
செம்மஞ்சள் - பிலாஸ்டிக், பொலிதீன்
(ஆ) கொம்போஸ்ட் பசளை தயாரிப்பு
பல்வேறு ஆக்கங்கள் செய்தல்
மீள் உற்பத்தி நிலையததிற்கு கையளித்தல்.

03. i. அன்றாட வீட்டு தேவைகளுக்கு
மின்சார உற்பத்திக்கு
விவசாய நடவடிக்கைகளுக்கு
ii. விவசாய நடவடிக்கையின் போது பயன்படுத்தப்படும் விவசாய இரசாயனங்கள் நீருடன் கலத்தல்
கை தொழிற்சாலை கழிவுகள் நீருடன் கலத்தல்
கப்பலில் ஏற்படும் எண்ணெய் கசிவுகள் கடல் நீருடன் கழுத்தல்

(2) www.PastPapers.WiKi (1)
Download Term Test Papers, Short Notes From One Place!

iii.

| நீர் பற்றா குறையினால் ஏற்படும் பிரச்சனைகள் | நீரை பாதுகாக்கும் வழி முறைகள் |
|---|---|
| சுத்தமான குடிநீர் பற்றாக்குறை | நீர் பிரயத்தை தடுத்தல் |
| உயிர்களின் வாழ்க்கைக்கு அச்சுறுத்தல் | சிக்கனமாக பயன்படுத்த |
| | குடிநீர் மாசடைதல் தடுத்தல் |
| விவசாய கைத்தொழில் நடவடிக்கைக்கு பாதிப்பு | காடுகள் அழிவதை பாதுகாத்தல் |
| நோய்களின் பரவல் | நீர் மூலகங்களை பாதுகாத்தல் |
| நீர் மீன் உற்பத்தி பாதிக்கப்படல் | |

04. i. ஆவியாதல், ஒடுங்கள், மழை வீழ்ச்சி, கழிவு நீரோட்டம்.
ii. x - வெப்பமானி y - மழைமானி z - காற்று விசைமானி
iii. மீனவர்கள், மாலுமிகள், விமானிகள், விவசாய

05. i. தேனீ, வண்ணத்துப் பூச்சி
ii. எலி நுளம்பு
iii. செண்பகம் : பயிர்களை நாசம் செய்யும் நத்தைகளை அழிக்கும்
தும்பி: நெல் வயல்களை நாசம் செய்யும் பூச்சியினங்களை அழித்து விடும்
மண்புழு: மண்ணை இளகச் செய்யும்
வௌவால்: மரங்களின் விதை பரவுவதற்கு உதவும்

06. i.

| இயற்கை அம்சங்கள் | மனிதனால் உருவாக்கப்பட்ட அம்சங்கள் |
|---|---|
| ஆறுகள் | குளம் |
| காடுகள் | வயல்வெளிகள் |
| பாறைகள் | சாலைகள் |
| மணல்கள் | தோட்டங்கள் |

i. நீர் மின்சாரம், கனிய எண்ணெய், இயற்கைவாயு, சூரியக்கலம், உயிர்வாயு
ii. (அ) சனத்தொகை அதிகரிப்பு
நுகர்வு தேவைகளின் அதிகரிப்பு
கைத்தொழில் நடவடிக்கைகளின் விருத்தி
போக்குவரத்து முன்னேற்றம்
வாழ்க்கை தரத்தின் மேம்பாடு

(ஆ) தேவையான இடத்தில் தேவையான சந்தர்ப்பத்தில் மாத்திரம் மின்விளக்குகளை ஒளிரச் செய்தல்
அதிக பயன் தரும் மின் விளக்கை உபயோகித்தல்
ஒரே நேரத்தில் தேவையான அளவு உடைகளை அழுத்தல்
குளிரூட்டி கதவை அடிக்கடி திறக்காதீர்கள்

07. i. (அ) திருகோணமலைத் துறைமுகம்
(ஆ) இயற்கை துறைமுகம், திருகோணேஸ்வர ஆலயம் காணப்படல், வெண்ணீர் உற்று காணப்படல்
ii. (அ) காலி நகரம்
(ஆ) கரையோரத்தில் ஒல்லாந்தர் கோட்டை காணப்படும், வெளிச்ச வீடு துறைமுகம் காணப்படல்

iii. (அ) கொழும்பு
(ஆ) பிரதான நிர்வாக நகரம், வர்த்தக நகரம், சர்வதேச விமான நிலையம் துறைமுகம் அமைந்துள்ளது.
iv. ஊவா மாகாணம்
v. பொலன்னறுவை

PAST PAPERS WIKI
(2) WWW.PastPapers.WiKi (2)

Download Term Test Papers, Short Notes From One Place!

# LOL.lk BookStore



# විභාග ඉලක්ක
# පහසුවෙන් ජයගන්න

**ඕනෑම පොතක් ඉක්මනින්**
**නිවසටම ගෙන්වා ගන්න**



| කෙටි සටහන් | පසුගිය ප්‍රශ්න පත්‍ර | වැඩ පොත් | සඟරා | O/L ප්‍රශ්න පත්‍ර
| A/L ප්‍රශ්න පත්‍ර | අනුමාන ප්‍රශ්න පත්‍ර | අතිරේක කියවීම් පොත්
| School Book | ගුරු අත්පොත්

pesuru Prakashana Private Ltd. | Akura Pilot | සමනල දැනුම | T | සතර

**පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර,**
**කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා**
**සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට**

**www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න**